ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில்

# வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது!

## மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி பேச்சு!



புதுடெல்லி,ஆக.13- மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி பேசுகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசில் இளைஞர்கள் பெரும்பாதிப்புக்குள்ளாயினர் என்றும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி அவர்கள் ஒன்றிய அரசின் பட்ஜெட் குறித்த விவாதத்தில் பங்கேற்று பேசியதாவது:

ஆகஸ்டு ஏழாம் நாளான இன்று எங்கள் ஆருயிர் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவு நாளாகும். இந்தியாவிலேயே முதல் முதலில் தலைவர் கலைஞர் அவர்கள் எங்கள் மாநிலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கினார். அதனை ஒட்டி, பின்னர் இந்தியா வெங்கும் எங்களது யூ.பி.ஏ அரசாங்கம் இந்தியாவிலுள்ள அனைத்துப் பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கி சட்டம் இயற்றியது. எனவே இந்தியா முழுவதும் பெண்கள் சொத்துரிமையை அனுபவிக்கும் வரை கலைஞர் அவர்களின் பெயர் மக்கள் மனதினில் தங்கி நிற்கும்.

அய்யா தற்போது அரசின் பட்ஜெட் குறித்து விவாதித்துக் கொண்டுள்ளோம். இதில் அரசின் பங்கென்ன? மக்களிடம் இருந்து வரி வசூல் செய்து அதனைச் செலவு செய்வது மட்டும் தானா? இல்லை பெண்கள், குழந்தைகள், ஏழைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் என சமுதாயத்தில் பின் தங்கியுள்ள மக்களின் வாழ்விலர் நலனில் கவனம் செலுத்தி திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதாகும். பின்தங்கியுள்ள மக்கள் என்று குறிப்பிடும் போது, மதரீதியாக பிற்படுத்தப்பட்டவர்களையும் சேர்த்து தான் கூறுகின்றேன்.

**60 சதவிகிதம் மறைமுகவரி!**

அரசுக்கு வரும் வரி வருவாயில் 60 சதவிகிதம் மறைமுக வரிகளாலும் 40 சதவிகிதம் நேரடி வரிகளாலும் வருகின்றதைக் காண்கிறோம். அதாவது ரூ. 20 லட்சம் கோடி ஜி.எஸ்.டி எனப்படும் சரக்குகள் மற்றும் சேவைவரியின் மூலமும் ரூபாய் 12 லட்சம் கோடி நேரடி வரிகள் மூலமும் வசூலாகிறது. இப்படி நேரடி வரிகள் மூலம் வரும் வருவாயின் அளவு குறைந்தது ஏன்? இந்த அரசு கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு சலுகை தருவதற்காக, அவர்களுக்கு இருந்த 30 சதவிகித வருமான வரியை 22 சதவிகிதமாக குறைத்தது தான். ஆனால் இந்த அரசு ஏழைகள் வாங்கும் இன்றியமையாத பொருட்கள் மீது ஜி.எஸ்.டி போட்டு தன் வருமானத்தை பெருக்கிக் கொள்கிறது. எனக்கு முன்பு பேசிய பல உறுப்பினர்கள் கூட இந்த அரசிடம் மருத்துவக் காப்பீடு ஆயுள் காப்பீடு திட்டங்களில் கிடைக்கும் வருமானத்துக்கு விளக்கு அளிக்க வேண்டும் என்று பேசியுள்ளார். இவ்வாறு சாதாரணமான பொது மக்களின் வருவாயை இந்த அரசு வரியாக பிடுங்கிக் கொள்கின்றது.

மருத்துவத் துறைக்கு பட்ஜெட்டில் 6 சதவிகித நிதியை ஒதுக்க வேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் மக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் இந்த துறைக்கு அரசு வெறும் 2 சதவிகித நிதியை மட்டும் ஒதுக்கியுள்ளது.

ஜி.எஸ்.டி வரிமுறையை ஆராய்ந்து பார்த்தால் இந்த அரசு குழந்தைகள் உணவாக உள்ள பால் பவுடருக்குக் கூட 18 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. இது மிகவும் அவமானகரமான செயலாகும்.

**சத்தியாகிரகப் போராட்டம்!**

இன்னும் ஒரு கோரிக்கை பல ஆண்டுகளாக கிடப்பில் உள்ளது. ஆம், உடல் ஊனமுற்றவர்களை, ஊனமுற்றவர்கள் என்று அழைக்கக் கூடாது; அவர்களை மாற்றுத்திறனாளிகள் என்று அழைக்க வேண்டும் என்று இரக்கத்துடன் எங்கள் தலைவர் கூறுவார். ஆனால் இந்த அரசு செய்கின்றது மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் ஊன்றுகோல்கள், செயற்கை கை, கால்களுக்கு 18 சதவிகிதம் ஜி.எஸ்.டி வசூலிக்கிறது. இது அவர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பது போன்றது; அவர்களின் வயிற்றில் அடித்து வரி வசூலிக்கப்படுகிறது. எனவே இனியாவது இந்த அரசு இப்பொருட்களின் மீது போடப்படும் ஜிஎஸ்டியை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

உங்களுக்கு நினைவிருக்கும் மகாத்மா காந்தி அவர்கள் 1930 ஆம் ஆண்டில் உப்பு சத்யாக்கிரகம் செய்தார் என்பது ஏழை மக்களின் உணவுப் பொருளான உப்பின் மீது வெள்ளையர்கள்வரிவிதித்தார்கள் என்பதற்காக இந்தப் போராட்டத்தை நடத்தினார். இப்போது மகாத்மா போன்று இன்னொருவர் யாரேனும் வந்து இந்த அரசு ஏழைகளின் வயிற்றில் அடித்து வசூலிக்கும் வரிகளை குறைப்பதற்காக போராட்டம் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

நாட்டில் வேலை இல்லா திண்டாட்டம் பெருகியுள்ளது. 2014 ஆம் ஆண்டு, ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவோம் என்று கோஷமிட்டு ஆட்சிக்கு வந்தீர்கள். ஆனால் கடந்த 10 ஆண்டுகளின் வேலை வாய்ப்பை உருவாக்குவதில் இந்த அரசு கடும் தோல்வியை சந்தித்துள்ளது.

இந்த நாட்டிற்குத் தற்போது ஆண்டுக்கு 80 லட்சம் பணியிடங்கள் உருவாக்கப்படப் வேண்டும் என்று பொருளாதாரக் கணிப்புகள் கூறுகின்றன. ஆனால் இந்த பட்ஜெட்டில் இந்த அரசு ஆண்டுக்கு 20 லட்சம் பணியிடங்கள் என்று 5 ஆண்டுகளில் ஒரு கோடி பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, இந்த நாட்டிலுள்ள 500 கார்ப்பரேட் கம்பெனிகளின் பணி அமர்த்தப்படுவார்கள் என்று கூறுகிறது. அதாவது, ஒரு ஆண்டுக்கு, 4000 பணியிடங்கள். இந்த ஒவ்வொரு கார்ப்பரேட் கம்பெனிகளிலும் உருவாக்கப் பட்டு பணியமர்த்தப்படுவார்கள் என்று கூறியுள்ளது. உண்மையிலேயே இது நடக்கக் கூடிய காரியமா?

நானும் எனக்குத் தெரிந்த சில கார்ப்பரேட் கம்பெனி காரர்களிடம் இது பற்றிப் பேசி பார்த்தேன். அவர்கள் கூறினார்கள், அவர்களது கார்ப்பரேட் கம்பெனிகளில் பணியாற்றும் மொத்த பணியாளர்களே சுமார் 4 ஆயிரத்தை தாண்ட மாட்டார்கள் என்று. ஆனால் அரசு ஒவ்வொரு கார்ப்பரேட் கம்பெனியிலும் 4000 பேரை பணியமர்த்தி அவர்கள் திறன் வாய்ந்த பணியாளர்களாக (ஸ்கில்டு வர்க்கர்ஸ்) மாற்றப் போகிறோம் என்று.

**விவசாயிகளை அழிக்க பார்த்தீர்கள்!**

உண்மையிலேயே, வேலை வாய்ப்பை உருவாக்கும் எண்ணம் இந்த அரசுக்கு இருந்தால் இப்படி கார்ப்பரேட் கம்பெனிகள் போன்ற அமைப்புகளில் பணியிடங்கள் ஏற்படுவது என்பது போன்ற தவறான திட்டங்களைத் தவிர்த்து அமைப்பு சாரா தொழில்களை ஊக்கவித்து உண்மையிலேயே வேலை வாய்ப்பை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். சிறு மற்றும் குரு தொழிற்சாலைகளை ஊக்குவித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தால் தொழில்களும் வளரும் வேலை வாய்ப்பும் பெருகும் ஆனால் நீங்கள் சிறு மற்றும் குறு தொழிற்சாலைகளை நசுக்கி வருகிறீர்கள். இந்த அரசின் கொள்கைகளால் ஆயிரக்கணக்கான சிறு மற்றும் குறு தொழிற்சாலை மூடப்பட்டு வருகின்றன அங்கே வேலை செய்து வந்த தொழிலாளர்கள் இன்று வேலைவாய்ப்பின்றி தவிக்கின்றனர் ஏறத்தாழ 47 சதவீத வேலை வாய்ப்புகள் இந்த சிறு மற்றும் குரு தொழிற்சாலைகள் தான் உருவாக்கித் தருகின்றன என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

நாட்டின் முக்கியத் தொழிலான விவசாயம் பற்றி கூறுவதனால் இந்த அரசு விவசாயிகளின் நலனுக்காகக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி மூன்று விவசாய சட்டங்களைக் கொண்டுவந்தார்கள் விவசாயிகளின் வாழ்வாதாரம் செழிக்கும் இந்த சட்டங்களை நடைமுறைப்படுத்தினால் என்றெல்லாம் சொன்னீர்கள்.

பின் எதனால் பின்வாங்கி இந்த சட்டங்களைத் திரும்பப் பெற்றீர்கள்? விவசாயிகளின் போராட்டத்தைக் கண்டு பயந்து தானே திரும்பப் பெற்றீர்கள்?

உண்மையிலேயே இந்தச் சட்டங்கள் விவசாயிகளுக்கு நலம் பயக்கும் என்று நீங்கள் எண்ணினால் நீங்கள் ஆண்டு கொண்டிருக்கு உத்தரப்பிரதேசம், பிஹார் போன்ற மாநிலங்களில் கொண்டு வருவது தானே? அதற்கான தைரியம் உங்களிடம் உண்டா? மாறாக இந்த சட்டங்களை நாடெங்கும் கொண்டு வந்து விவசாயத்தை அழிக்க பார்த்தீர்கள்?

ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மடிகின்றனர். இந்த எண்ணிக்கையை மேலும் பல மடங்கு கூட்டுவதற்குத் தானே உங்களது விவசாய சட்டங்கள் பயன்பட்டிருக்கும்.

அடுத்ததாக தேர்தல் பத்திரங்கள் பற்றி கூற விரும்புகிறேன். உச்சநீதிமன்றம் கடுமையாகத் தன் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது, இந்தத் தேர்தல் பத்திரங்கள் மீது இந்த அரசு தனக்கு வேண்டியவர்கள் பெரும் பண ஆதாயம் பெறும் வகையில் இந்தத் திட்டத்தை செயல்படுத்தியது. நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் A1 மற்றும் A2 என்று குறிப்பிட்டது போல உங்கள் பணக்கார நண்பர்கள் மேலும் மேலும் பணம் ஈட்டத்தான் இந்த அரசு உதவியது.

தேர்தல் பத்திரங்கள் மூலம் பி.ஜே.பி ரூ. 18000 கோடியை வசூல் செய்தது. உங்கள் 10 ஆண்டுகால ஆட்சிக்கு ஆண்டுக்கு ரூ. 1800 கோடி என ரூ. 18000 கோடியை வசூல் செய்துள்ளீர்கள். உச்ச நீதிமன்றம் யார் யாரிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டது என்பதை பொதுவெளியில் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டது. அதனால்தான் நீங்கள் எவ்வளவு வசூல் செய்தீர்கள்? எப்படியெல்லாம் வசூல் செய்தீர்கள் என்பது பொதுமக்களுக்குத் தெரிய வந்தது.

ஒரு நிறுவனத்தின் மீது அமலாக்க இயக்குநகரம் ரெயட் நடத்துகிறது. அடுத்த சில மாதங்களில் அந்த நிறுவனம் பி.ஜே.பி கட்சிக்கு ஒரு பெரிய தொகையை தேர்தல் பத்திரங்கள் மூலம் தருகின்றது. பின்பு என்ன மாயமோ தெரியவில்லை அமலாக்க இயக்குநகரத்தின் நடவடிக்கைகள் கைவிடப்படுகின்றன.

பி.ஜே.பி கட்சியின் ஒரு அங்கமாக செயல்படும் அமலாக்கத்துறை பி.ஜே.பிக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் பணவசலும் மற்ற உதவிகளும் செய்து வருகின்றது. இந்த கேவலமான நடவடிக்கைகள் உச்சநீதி மன்றத்தின் உத்தரவால் தான் வெளிச்சத்துக்கு வந்தது.

பொதுவாக பட்ஜெட் வெளியிடப்படும் போது ஆளுங்கட்சியினர் போற்றுவதும், எதிர்க்கட்சியினர் குறை கூறுவதும் அரசியலில் வாடிக்கை தான். ஆனால், இந்த பட்ஜெட்டைப் பொருத்தவரை பொதுமக்களே பெரும் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

இந்த அரசு அவர்களுக்கும் எந்த சலுகைகளும் வழங்கவில்லை. மாறாக குறுகிய கால மற்றும் நீண்டகால நிலம் மற்றும் வீடுகளின் மீது செய்யப்பட்டுள்ள முதலீடுகளுக்கும் கடுமையான வரி விதிப்பைச் செய்துள்ளீர்கள்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி பேசினார்.

## மொழிப்போர்த் தியாகி மருதுவாஞ்சேரி சாரங்கபாணி தாயார்

# திருமதி காசாம்பு அம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 13-

திருவாரூர் மாவட்டம் குடவாசல் ஊராட்சி ஒன்றியம் மொழிப்போர்த் தியாகி மருதுவாஞ்சேரி சாரங்கபாணி அவர்களின் தாயார் திருமதி காசாம்பு அம்மாள் (வயது 95) நேற்று முன்தினம் இயற்கை எய்தினார்.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவரது குடும்பத்தாருக்கு செய்தி அனுப்பியுள்ளார்.



திருவாரூர் மாவட்டம் குடவாசல் ஊராட்சி ஒன்றியம் மொழிப்போர்த் தியாகி மருதுவாஞ்சேரி சாரங்கபாணி அவர்களின் தாயார் திருமதி காசாம்பு அம்மாள் (வயது 95) நேற்று முன்தினம் இயற்கை எய்தினார். செய்தியறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. நேரில் சென்று மறைந்த திருமதி காசாம்பு அம்மாள் உடல்மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# நீதியரசர்கள் பார்வைக்கு! ②

"People who should be getting bail in the trial Courts are not getting it there, as a result of which, they have to invariably move the high courts. People who should be getting bail in the high courts will not necessarily get it, as a result of which. they have to move to the Supreme Court. This delay com pounds the problem of those who are facing arbitrary arrests"

- Chief Justice Chandrachud



**"விசாரணை நீதிமன்றங்களில் ஜாமின் பெற வேண்டியவர்களுக்கு அங்கு அதனைப் பெற்றிட முடியவில்லை. அதன் விளைவாக அவர்கள் தவிர்க்க இயலாத நிலையில், உயர் நீதி மன்றத்துக்குச் செல்கின்றனர். உயர்நீதி மன்றங்களில் ஜாமின் பெற வேண்டியவர்களுக்கும் அது அங்கு கிடைக்காத நிலையில், அவர்கள் உச்சநீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை வருகிறது. இந்தத் தாமதம் தன்னிச்சையான காரணமற்ற கைதுகளைச் சந்திப்பவர்களின் பிரச்சினைகளை மேலும் கூடுதலாக அதிகரிக்கச் செய்கிறது."**

**- தலைமை நீதியரசர் சந்திரசூட்**

# துங்கபத்ரா அணை மதகில் உடைப்பு!

பெங்களூர், ஆக.13- விஜயநகரா மாவட்டத்தில் ஹோசபேட் அருகே அமைந்துள்ள அணையின் 19ஆம் எண் கதவு உடைந்துள்ளது. அதன் வழியே அணையிலிருந்து தண்ணீர் வெளியேறி வருகிறது. சனிக்கிழமை இரவு 11 மணியளவில் 19வது கதவின் சங்கிலி இணைப்பு உடைந்துள்ளது.

இதைத் தொடர்ந்து, அணையிலிருந்து விநாடிக்கு 1 லட்சம் கன அடி வீதம் தண்ணீர் வெளியேறுவதால் ஆற்றங்கரையோரம் உள்ள பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஆற்றில் நீர் வரத்து எப்போது வேண்டுமானாலும் விநாடிக்கு 3 லட்சம் கன அடியை எட்டும் என்று அஞ்சப்படுகிறது. இதன் காரணமாக, கரையோர மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, கோப்பல், விஜயநகரா, பெல்லாரி, ராய்ச்சூர் மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி அணையின் 33 மதகுகளும் திறக்கப்பட்டு அவற்றின் வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. உடைந்துள்ள கதவினை சரிசெய்யும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும், அதிகளவு தண்ணீர் வெளியேறுவதால் பணியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# எஸ்.பி. சற்குணபாண்டியன்

## ஆகஸ்ட் 13 (2016)



'மாணவி சத்குணம்' என்ற பெயரில் கழக மேடைகளில் பேசி வந்த சத்குணபாண்டியன் சிறுமியாக இருந்தபோதே, கழகக் கொள்கைகளை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டவர். இவரது தந்தை பழம் பெரும் சுயமரியாதைக்காரரான பொன்னுசாமி அவர்களால் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டப்பட்டு, திராவிட இயக்கத்தின் தீபமாய், மாதர்குல திலகமாய் விளங்கியவர்.

"சொல்லின் செல்வி" என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட இவர், மாணவரணி, மகளிர் அணி, வடசென்னை மாணவரணி, சென்னை மாவட்ட மகளிர் அணி, மாநில மகளிர் அணியின் செயலாளர் என்று படிப்படியாகப் பொறுப்பேற்று, கழக துணைப் பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்தார்.

1971இல் சென்னை மாநகராட்சிக்கு நியமன உறுப்பினராகவும் – 1989, 1996 ஆகிய இரண்டு முறை சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 1996ல் தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தார்.

மதுரை, திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் மண்டல மகளிர் மாநாடு நடத்தி ஒன்றிய, நகர மகளிர் அமைப்புகளை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

17.9.1988 அன்று சென்னையில் நடைபெற்ற தேசிய முன்னணி ஊர்வல அணிவகுப்பில் பல்லாயிரக்கணக்கான மகளிரைப் பங்கேற்கச் செய்து ஊர்வலத்திற்கு சிறப்பு சேர்த்ததன் காரணமாக சென்னை கடற்கரையில் நடைபெற்ற தேசிய முன்னணித் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் திருக்கரத்தால் தங்கச் சங்கிலி பரிசு பெற்றவர்.

திருச்செந்தூர் நீதிகேட்டு நெடும்பயணத்தில் தலைவர் கலைஞருடன் பயணம் மேற்கொண்டவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் மகளிர் படை திரட்டி அதற்குத் தலைமை தாங்கி சிறை சென்றவர்.

இளம் பிராயத்திலிருந்து இவருக்கு இயக்கத்திலிருந்த ஆர்வத்தையும், தியாகத்தையும், பேச்சாற்றலையும் பாராட்டும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் (1990) தலைமைக் கழகத்தின் சார்பில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**